**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

------

**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI**

**Calender Case No.01 of 2024**

**Deposition of witness for : Pw16**

**Name : M. சந்துரு**

**Father's / Husbend Name :**

**Village :**

**Taluk :**

**Calling :**

**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of August 2025.**

**எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை:**

நான் தற்போது ஜோலார்பேட்டை ரயில்வே காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 06.05.2022 ம் தேதி நாகரசம்பட்டி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில்இருந்த போது சிறப்பு காவலர் ஆய்வாளர் சாமிநாதன் என்பவர் காவேரி பட்டிணம் அரசு மருத்துவமனையில் நோயாளியாக சிகிச்சை பெற்ற ராஜேஸ்வரி என்பவரிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்து மேல் விசாரணைக்காக என்னிடம் ஒப்படைத்தார். நான் புகார் வாக்குமூலத்தை பரிசீலித்து நாகரசம்பட்டி காவல்நிலைய குற்ற எண் 91/2022 சட்ட பிரிவுகள் 147,148,294(b) 323,324,307 இ.த.ச. ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.14 ஆக

குறியீடு செய்யப்படுகிறது. புலன் விசாரணைக்காக பாரூர் வட்ட காவல் ஆய்வாளரிடம் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

புகாரின் அடிப்படையில் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான் . சம்பவம் நடந்த இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 5 கி.மீ தூரம் இருக்கும். 3-வதாக நடந்ததாக கூறும் சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 13. கி.மீ தூரம் இருக்கும். 3-வது சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் காவேரிபட்டிணம் காவல்நிலையம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சம்பவத்தை பற்றி புகார் பெற்றிருந்தாலோ வழக்கு பதிவு செய்திருந்தாலோ காவேரி பட்டிணம் காவல் நிலையம்தான் செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. மற்றொரு குற்ற வழக்கின் குற்ற எண் 90/22 என்ற வழக்கில் எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய்யான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி புகாருக்கும் வழக்கிற்கும் எவ்வித சம்மதமும் இல்லை என்றால் சரியல்ல. உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இனங்க புகார் பெற்று வழக்குபதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.